සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

2ம் தவணை மதிப்பீடு - 2018

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade | 07 | විෂයය / பாடம் / Subject | வரலாறு I,II |
| காலம் : 2 மணித்தியாலங்கள் | | | |

பெயர்:....................................... பரீட்சை இல :..............................

**கவனத்திற் கொள்க.**

- **பகுதி – I இல் சகல வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்க.**
- **பகுதி- II ற்கான விடைகளை வேறு தாளில் எழுதி, பகுதி- I உடன் இணைத்து கையளிக்க.**

## பகுதி –I

01. புராதன காலத்தில் கல்வெட்டுக்களில் ‘பிட்டபிம்’ எனக் குறிப்பிடப்பட்டவை,

1. விவசாய நிலம் 2. சேனை 3. வயல் 4. பிறருடைய நிலம்

02. அன்றைய காலத்தில் நெசவு தொழில் செய்வோர் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

1. கும்புல்லு 2. மணிகார 3. பெஹெகார 4. தம்பகர

03. இலங்கை வெளிநாட்டு வர்த்தகம் செய்ய துணைபுரிந்த முக்கிய துறைமுகம்,

1. கோகர்ண 2. கொழும்பு 3. காலி 4. மாகம்புர

04. இளவரசர் மானவர்மன் தனது பாதுகாப்பிற்காக இந்தியாவின் எப்பிரதேசத்திற்குச் சென்றான்?

1. சோழம் 2. கலிங்கம் 3. கேரளம் 4. பல்லவம்

05. பாண்டிய தேசத்தை ஆக்கிரமிக்க, குட்டக தளபதியின் தலைமையில் பலம் பொருந்திய படையை அனுப்பிய மன்னன்,

1. முதலாம் சேன மன்னன் 2. இரண்டாம் சேன மன்னன்
3. மானவர்ம மன்னன் 4. இரண்டாம் தடோபதீச மன்னன்

06. மானவர்மன் ஆட்சியின்போது, நாட்டினுள் முறையான அடிப்படை உழுங்கமைப்பு கொள்கை காணப்பட்டதாக கூறும் மூலாதாரம்,

1. வேவெல்கெட்டிய கல்வெட்டு 2. மகாவம்சம்
3. மிகிந்தலை சுவர் கல்வெட்டு 4. பணாகட்டுவ செப்பேடு

07. நிஸ்ஸங்கமல்ல மன்னன் மக்களின் விசுவாசத்தை வென்று செயலாற்றியவன் என்பதை உறுதிப்படுத்தும் கல்வெட்டு அல்லாதது,

1.தெவனகல கல்வெட்டு 2. கல்பொத்த கல்வெட்டு

3. அட்டதாகே கல்வெட்டு 4. தம்புல பாறை கல்வெட்டு

08.பின்வருவோரில் யாருடைய ஆக்கிரமிப்பினால் அநுராதபுர இராசதானி வீழ்ச்சியடைந்தது?

1. பல்லவர்கள் 2. சோழர்கள் 3. கலிங்கர்கள் 4. சேரர்கள்

09. குருடர்கள், நோயாளிகளுக்காக வைத்தியசாலைகளையும் தானசாலைகளையும் கட்டுவித்த மன்னன்,

1. பண்டுகாபய மன்னன் 2. முதலாம் பராக்கிரமபாகு மன்னன்

3. நிஸ்ஸங்கமல்ல மன்னன் 4. முதலாம் உபதிஸ்ஸ மன்னன்

10. தமது சிறு வயதில் உருகுணையின் சித்னரும்பிப் புதல்னா என்பவருடைய உதவியுடன் அதிகாரத்திற்கு வந்தவர்,

1. மானவர்ம மன்னன் 2. ஐந்தாம் மகிந்த மன்னன்

3. முதலாம் விஜயபாகு மன்னன் 4. நிஸ்ஸங்கமல்ல மன்னன்

11. தோப்பா வாவி, தும்புடுளு வாவி ஆகியவற்றை இணைத்து உருவாக்கப்பட்ட குளம்,

1. பராக்கிரம சமுத்திரம் 2. திசா வாவி

3. ஹுருளு வாவி 4. கந்தளாய் குளம்

12. துட்டகைமுனு மன்னனின் மகனுக்கு சாலிய எனும் பெயரிடக் காரணம், அவன் பிறக்கும்போது கரைநெல் பேரளவில் விளைந்தமையாகும். என குறிப்பிடும் மூலாதாரம்,

1. சிஹலவஸ்து 2. ஜாதக கதைகள் 3. ராஜாவலிய 4. தீபவம்சம்

13. சோழர் ஆட்சியிலிருந்து நாட்டை விடுவித்து, இலங்கையரின் அபிமானத்தைப் ற்றெவர்,

1. மகா பராக்கிரமபாகு மன்னன் 2. துட்டகைமுனு மன்னன்

3. நிஸ்ஸங்கமல்ல மன்னன் 4. மகா விஜயபாகு மன்னன்

14. அளவரசன் பராக்கிரமபாகு பிறந்த இடத்தில் கட்டப்பட்டுள்ள விகாரை,

1. மிரிசவெட்டிய சைத்திய 2. தெதிகம கொட்ட வெஹெர

3. மாளகாவில சைத்திய 4. கிரி வெஹெர

15. பொலனறுவையில் தனது அதிகாரத்தை நிலைநிறுத்த, பராக்கிரமபாகு மன்னனுக்கு சவாலாக இருந்த, உருகுணையின் படைக்கு தலைமை தாங்கிய ராணி,

1. லீலாவதி ராணி 2. கல்யாணவதி ராணி 3. ராணி சுகலாதேவி 4. இளவரசி மித்தா

16. உலக கலாசார மரபுரிமையாக யுனெஸ்கொ அமைப்பால் தெரிவு செய்யப்பட்ட மொகஞ்சதாரோ நகரம் , தற்போது எந்நாட்டிற்கு உரித்தானது?

1. இந்தியா 2. ஈராக் 3. சீனா 4. பாகிஸ்தான்

17. முகமூடி தயாரிப்பதில் பிரசித்தி பெற்ற தென் மாகாணத்திற்கு உரித்தான நகரம்,

1. அம்பலாங்கொடை 2. கதிர்காமம் 3.மாத்தறை 4. ஹிக்கடுவை

18. புராதன இந்து நூல்களில் ''வித்தியாரம்பம்'' எனக் குறிப்பிடப்படுவது,

1. பிறந்தநாள் சம்பிரதாயங்கள் 2. ஏடு தொடக்குதல்

3. காது குத்துதல் 4. பெயர் சூட்டுதல்

19. புராதன காலத்தில் காணப்பட்ட ஆடல், பாடல் போன்ற கலைகளை தற்போதும் பாதுகாத்து , அவற்றுக்கு சந்தர்ப்பமளிக்கும் ஓர் நிகழ்விற்கு உதாரணம்,

1. பொசன் பெரகரா 2. வெசாக் விழா

3. எசல பெரகரா 4. நாட்டார் பாடல்களும் நாடகங்களும்

20. நாம் எமது கலாசார மரபுரிமைகளை பாதுகாக்க வேண்டியதன் நோக்கம்,

1. அவற்றை விற்று வெளிநாடுகளிலிருந்து பணம் பெறுவதற்காக.

2. பொழுதுபோக்கு சுற்றுலாக்கல் செல்வதற்காக.

3. வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ள.

4. இலங்கையின் தனித்துவத்தை உலகிற்கு எடுத்துக் காட்டவும் எமது தனித்துவத்தைப் பேணி பாதுகாக்கவும்.

(2x20=40 புள்ளிகள்)

## பகுதி – II

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **ஏனைய வினர்களில் ஏதேனும் நான்கினைத் தெரிக.**
- **விடையளிக்க வேண்டிய வினாக்களின் மொத்த எண்ணிக்கை ஐந்து.**

01. (i) பின்வரும் A,B,C,D இல் வினவப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.

A- சேன பயிர்ச்செய்கையின் போது பயன்படுத்தப்படும் நவதெளிசேனை எனளப்படுவது யாது?

B- சூடடித்தல் என்பதனால் குறிப்பிடப்படுவது யாது?

C- அக்காலத்தில் போக்குவரத்திற்கு பயன்படுத்தப்படும் மாடுகள் எவ்வாறு அழைக்கப்பட்டன?

D- இலங்கையில் முதன்முதலில் பயன்படுத்தப்பட்ட நாணயத்தைப் பெயரிடுக.(04 புள்ளிகள்)


(ii) பின்வரும் யுஇடீ உருக்களை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளிக்க.

A- 

(i) யு உருவில் காட்டப்பட்டுள்ள பண்பாட்டு மரபுரிமையைப் பெயரிடுக.

(ii) இது எந்நாட்டில் அமைந்துள்ளது?

(04 புள்ளிகள்)


B- 

(i) B உருவில் காட்டப்பட்டுள்ள இடத்தைப பெயரிடுக.

(ii) இந்தப் பூங்கா எங்கு அமைந்துள்ளது?

(04 புள்ளிகள்)

(iii) தரப்பட்டுள்ள இலங்கை வரைபடத்தில் DEFG எனும் எழுத்துக்களால் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களைப் பெயரிடுக.




D : ..............................

E : ...............................

F : ................................

G : .................................

(04 புள்ளிகள்)

(02)(i) அன்றைய இலங்கையுடன் வர்த்தக தொடர்புகளை மேற்கொண்ட நாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) வெளிநாடுகளிலிருந்து எமது நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் இரண்டைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii)(A) வர்த்தக நிர்வாகம் தொடர்பான சட்டதிட்டங்கள் அடங்கிய பதுளை தூண் கல்வெட்டை அமைத்த மன்னன் யார்?

(B) அதில் காணப்படும் மூன்று சட்டதிட்டங்களைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(03) (i) அநுராதபுர யுகத்தில் அதிக காலம் ஆட்சி புரிந்த அரச வம்சங்கள் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) அநுராதபுர யுகத்தில் அதிகமாக எம்முறையில் அரசுரிமை பெறப்பட்டது? (04 புள்ளிகள்)

(iii) அக்காலத்தில் மன்னனால் மேற்கொள்ளப்பட்ட காரியங்கள் ஐந்தைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(04) (i) அரச வேலைகளின்போது அரசருக்கு உதவியாக இருந்த அதிகாரிகள் இருவரைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) அநுராதபுர யுகத்தில் மக்களின் நலன் பற்றி அதி அக்கரைக் காட்டிய மன்னர்கள் இருவரின் பெயர்களைத் தருக. (04 புள்ளிகள்)

(iii) மகா விஜயபாகு மன்னனின் வெளியுறவுக் கொள்கைகள் இரண்டை எழுதி விளக்குக. (05 புள்ளிகள்)

(05) (i) முதலாம் விஜயபாகு மன்னனைப் பற்றி கற்க உதவும் மூலாதாரங்கள் இரண்டினைக குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) மகா பராக்கிரமபாகு மன்னன், புத்தசாசன விருத்திக்காக மேற்கொண்ட சேவைகள் இரண்டை எழுதுக. (04 புள்ளிகள்)

(iii) மகா பராக்கிரமபாகு மன்னன் பொருளாதார வளர்ச்சிக்காக மேந்கொண்ட காரியங்கள் இரண்டை எழுதி விளக்குக. (05 புள்ளிகள்)

(06) (i) அநுராதபுர யுகத்தின் கல்வெட்டுக்களில் பின்வருமாறு குறிப்பிடப்படுவோர் யார்?

A- அஷ அதெக B- அதி அதிக (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கல்வெட்டுக்களில் கூறப்படும் தகவல்களை சுருக்கமாக எழுதுக.

A- சங்கமு விகாரை கல்வெட்டு B- தெவனகல கல்வெட்டு (04 புள்ளிகள்)

(iii)A- நிஸ்ஸங்கமல்ல மன்னன் முகங்கொடுத்த சவால்கள் மூன்றை எழுதுக.

B- நிஸ்ஸங்கமல்ல மன்னனால் கட்டுவிக்கப்பட்ட வணக்கஸ்தலங்கள் இரண்டைக குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(07) (i) தொட்டுணர முடியாத மரபுரிமைகள் இரண்டை எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) யுனெஸ்கோ அமைப்பால் உலக மரபுரிமைகளாக பெயரிடப்பட்டுள்ள இலங்கையின பிரதேசங்கள் நான்கினை எழுதுக. (04 புள்ளிகள்)

(iii) சீகிரியா கோட்டையாகவும் கலையம்சம் பொருந்திய ஒரு படைப்பாகவும் குறிப்பிட ஏதுவான காரணிகள் இரண்டை எழுதி சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)